நீதிமன்றத்தில் ஆஜராக வந்தவர் பட்டப்பகலில் வெட்டி கொலை!

நெல்லையில் பயங்கரம்

நெல்லை, டிச. 21-

நெல்லை நீதிமன்ற வாசலில் பாளை கீழநந்தத்தை சேர்ந்த வாலிபர் மாயாண்டி வெட்டி படுகொலை செய்யப் பட்டார்.

இவர் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு பாளை கீழ நந்தத்தில் பஞ்சாயத்து கவுன்சிலர் ராஜாமணி என்பவர் வெட்டி கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்ததாக கூறப்படுகிறது.

கொலையுண்ட மாயாண்டி உள்ளிட்ட மேலும் அதே கீழ தந்தத்தை சேர்ந்த 3 பேர் ஏற்கனவே 8 மாதங்களுக்கு முன்பு கொலையுண்ட ராஜாமணி கொலை வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்த நிலையில் தற்போதைய 4 பேர் கொலை கும்பல் மாயாண்டியை மட்டும் இலக்கு வைத்து கொலை செய்தது ஏன் என்பது குறித்து நடைபெற்ற விசாரணையில் மாயாண்டியின் தந்தை வழக்கறிஞர் என்பதும், முன்னர் நடந்த கீழ்ப்பாட்டம் ராஜாமணி கொலை வழக்கை நீரத்து போக நீதிமன்ற புற நடவடிக்கைகள் மேற்கொண்டதாகவும், அதனால் பகைமை பாராட்டுதலின் உச்ச கட்டமாக ராஜாமணி கொலைக்கு பழிக்கு பழிவாங்கும் விதமாக மாயாண்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும், கொலையாளிகளில் ஒருவரான இருதயராஜ் என்பவரை வழக்கறிஞர் கார்த்திக் தம்பான் உள்ளிட்ட சிலர் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்து விட்டனர் என்று கூறப்படுகிறது.

மேலும் காரில் தப்பிச் சென்ற 3 பேர் கொண்ட கும்பலை போலீசார் தேடி வருகின்றனர்

ஏற்கனவே கொலையுண்ட ராஜாமணியும், தற்போது கொலையுண்ட மாயாண்டியும் பாளை. கீழநத்தத்தில் வெவ்வேறு பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

வேலூர் மாநகர திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்தநாள் விழா மற்றும் கிறிஸ்துமஸ் திருநாளை முன்னிட்டு 1547 கிறிஸ்தவ பெருமக்களுக்கு பிரியாணிக்கு தேவையான அனைத்து விதமான மளிகை பொருட்கள் மற்றும் ரூ.200 ம் மாநகர கழக செயலாளரும் வேலூர் சட்டப்பேரவை உறுப்பினருமான ப.கார்த்திகேயன் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் மாநில தணிக்கை குழு உறுப்பினர் தி. அ முகமது சகி மேயர் சுஜாதா மாமன்ற உறுப்பினர்கள் முருகன், சந்திரசேகர் உள்ளிட்ட மாநகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திமுகவில் இணைந்த 50க்கும் மேற்பட்ட அதிமுக தொண்டர்கள்

மயிலாடுதுறை, டிச. 21-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோவில் தி.மு.க. மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமுர்த விஜயகுமார் ஏற்பாட்டில், மயிலாடுதுறை மாவட்டம் பொறையாரில் கலைஞர் அரங்கத்தில் மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா. எம்.முருகன் தலைமையில் பிள்ளை பெருமாள் நல்லூர் ஊராட்சி, செட்டிமேடு பகுதியிலிருந்து அ.தி.மு.க கட்சியில் இருந்து விலகி 50 க்கும் மேற்பட்டவர்கள் தி.மு.க.வில் நேற்று இணைந்தனர்.

இந்நிகழ்வில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அப்துல் மாலிக், பேரூராட்சி மன்ற தலைவர் சுகுணா சங்கரி குமரவேல், தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற துணை தலைவர் பொன். இராஜேந்திரன், சு.கலிய பெருமாள், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வைத்தியநாதன், மாவட்ட பிரதிநிதி சடகோபன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில், ஊராட்சி மன்ற தலைவர் தீபா முனுசாமி, திருக்கடையூர் இளைஞரணி மாரியப்பன், தினேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ராகுல்காந்தி மீது 6 பிரிவுகளில் வழக்கு பதிவு

பா.ஜ.க. எம்.பி.க்கள் தாக்கப்பட்ட புகாரில் கொலை முயற்சி நீக்கம்

டெல்லி, டிச. 21-

நாடாளுமன்றத்தில் நேற்று காங்கிரஸ் பாஜக எம்பிக்கள் போராட்டம் நடத்தியதல் திடீரென்று தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் பாஜகவின் 2 எம்பிக்களின் மண்டை உடைந்த நிலையில் ராகுல் காந்தி மீது 6 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலையில் காங்கிரஸ் உள்பட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தின் நுழைவு வாயிலில் அமித்ஷாவை மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தினர்.

அதேபோல் காங்கிரஸ் தான் அம்பேத்கரை அவமானப்படுத்தி உள்ளது. தற்போது அமித்ஷாவுக்கு எதிராக திட்டமிட்டு எடிட் செய்த வீடியோவை எதிர்க்கட்சிகள் பரப்பி வருகின்றன என்று பாஜக எம்பிக்களும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இருதரப்பினரும் போட்டி போட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது திடீரென்று இரு தரப்பினர் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் பாஜக எம்பிக்கள் சந்திர சாரங்கி, முகேஷ் ராஜ்புத் ஆகியோர் காயமடைந்தனர். சந்திர சாரங்கி மற்றும் முகேஷ் ராஜ்புத் ஆகியோரின் தலையில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மருத்துவமனையில் இருவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ராகுல் காந்தி தான் சந்திர சாரங்கியை தள்ளிவிட்டதாகவும், இதனால் தான் அவர் காயமடைந்ததாகவும் பாஜக சார்பில் குற்றம் சாட்டப்பட்டது. மேலும் இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது பாஜக எம்பி அனுராக் தாகூர் சார்பில் நாடாளுமன்ற தெரு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அந்த புகாரில் ராகுல் காந்தி மீது பிஎன்எஸ் சட்டம் 109 (கொலை முயற்சி), 115 (வேண்டுமென்றே காயப்படுத்துதல்), 117 (வேண்டுமென்றே தாக்கி காயப்படுத்துதல்), 125 (மற்றவர்களின் உயிர் அல்லது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் செய்வது), 131 (குற்றவாளிகளை பயன்படுத்துதல்), 351 (குற்றம்சார்ந்த மிரட்டல்), 3(5) (குற்றம் செய்யும் நோக்கத்துடன் ஒன்றாக கூடுதல்) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த புகாரை பெற்று கொண்ட போலீசார் கொலை முயற்சி பிரிவை தவிர்த்தனர். மற்றபடி பிற 6 பிரிவுகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது ஒரு பக்கம் இருக்க பாஜக வினரால் தனக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகக் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார். இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அவர் அவை தலைவருக்கும் கடிதம் எழுதியுள்ளதோடு, காங்கிரஸ் சார்பிலும் பாஜகவினருக்கு எதிராக நாடாளுமன்ற தெரு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மருந்தகங்களுக்கான விழிப்புணர்வு கூட்டம்

விராலிமலை, டிச. 21-

புதுக்கோட்டை மாவட்ட மருந்தகங்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடந்தது புதுக்கோட்டை மாவட்டம் மாவட்ட குடும்ப நலச் செயலகம் மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை இணைந்து தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனை சார்ந்த மருந்தகங்களுக்கு கருகலைப்பு மருந்துகள் விற்பனை தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது புதுக்கோட்டை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் ஸ்ரீ பிரியாதேன்மொழி, துணை இயக்குநர் குடும்பநலம் கோமதி,

மருந்து கட்டுப்பாட்டுத்துறை உதவி இயக்குநர் சுபத்ரா, மருந்து ஆய்வாளர்கள் அப்துல்காதர், தீபா உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருகலைப்பு,

மருந்துகள் விற்பனை தொடர்பான விழிப்புணர்வு குறித்த மருந்து வணிகர்களிடம் பேசினர். இந்த கூட்டத்தில் மாவட்ட மருந்து வணிகர்கள் சட்ட மாவட்ட புரவலர் வீனஸ் ராஜேந்திரன் மாவட்ட செயலாளர் ராமநாதன், பொருளாளர் ரமேஷ், மொத்த மருந்து வணிக பிரிவு தலைவர் பழனியப்பன், அமைப்பு செயலாளர் முத்துராமன், ராஜ்குமார், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் சலீம் மொத்த மருந்து வணிகர்கள் பிரிவு துணைத்தலைவர் விஜயரகுநாதன், இணை செயலாளர் பாண்டியன், மாவட்ட துணைத்தலைவர் முகமதுசாதிக் பாட்சா கலந்துகொண்டனர்.

ஒட்டன்சத்திரத்தில் விசிகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்

ஒட்டன்சத்திரம், டிச. 21-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். பாராளுமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியதாக கூறப்படுவது அம்பேத்கர் அம்பேத்கர் என்ற முழக்கம் பேஷனாகி விட்டது எனவும் அதற்கு பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை சொல்லி இருந்தால் சொர்க்கத்திலாவது இடம் கிடைத்திருக்கும் என்று பேசியதாகவும் அவர் கூறியதை மாநிலங்களவை மட்டுமல்லாது அனைத்து மாநிலங்களை சேர்ந்த முதல்வர்களும் கண்டனம் தெரிவித்தனர். அந்த

நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திமுக சார்பில் தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தார்.

அதின் அடிப்படையில் திமுகவில் கூட்டணியில் இருக்கின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சினர் ஒட்டன்சத்திரம் பஸ் நிலையம் முன்பு ஒட்டன்சத்திரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜவளவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திண்டுக்கல் மேலிட பொறுப்பாளர் ஜான்சன் கிரிஸ்டோபர், தொழிலாளர் விடுதலை முன்னணி இயக்க மாநில துணைச் செயலாளர் தங்கராஜ், வணிகரணி மாநில துணை செயலாளர் பொன்வளவன் கண்டன உரை நிகழ்த்தினார். அதன் பிறகு கண்டன கோஷங்களை எழுப்பினர். இதில் வணிகர் அணி மாவட்ட அமைப்பாளர் பூக்கடை செந்தில், நகர செயலாளர் வேலுச்சாமி, கிழக்கு ஒன்றிய பொருளாளர் வடிவேல், ஒன்றிய துணைச் செயலாளர் மாதவன், மகளிர் விடுதலை இயக்கத்தை சேர்ந்த மீனாட்சி, பிரேமா, சரஸ்வதி மாரியம்மாள் என கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் லிமிடெட். பிருந்தாவன் பில்டிங், ஃபிளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
சிஐஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **''இருக்கும் இடம்'' மற்றும் ''இருக்கும் நிலை''** என்ற அடிப்படையில் **''பொது ஏலம்''** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப் பட்டது	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	17.12.2024 அன்று பஜ மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. ஆனந்த் பாபு எஸ் 2. சௌம்யா எம்	சொத்தின் முகவரி - ப்ளாட் எண் S2, இரண்டாவது தளம், ஹிதேஷ் என்கிளேவ் எனப்படும் கட்டிடத்தில், மனை எண் 96 கொண்ட நிலத்தின் மீது அமைந்துள்ளது மற்றும் மேற்கு பகுதி மனை எண் 95 ஆகும். மொத்த அளவை 3900 சதுர அடி. அமைந்துள்ள இடம் ஸ்ரீ பாலாஜி நகர் - கிழக்கு - 5வது தெரு (தற்போது 3வது பிரதான சாலை), காண்க திட்ட அனுமதி எண்கள் PPA/WD CN07/6993/2013 மற்றும் PPA/WD CN07/7019/2013, கட்டிட அனுமதி எண்கள் BA/WD CN07/03270/2014 மற்றும்BA/ WD CN07/03268/2014, சர்வே எண் 765/1b மற்றும் 765/1a1 கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம், மத்திய சென்னையின் பதிவு மாவட்டம், வில்லிவாக்கத்தின் துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்தது.	CHNHL17 000319 / CHNHL17 000330	12.11.2023	ரூ. 4,62,555/-	ரூ.97,38,497.53 /-	ரூ. 46,25,550/-	முன் அப்பாயின்ட் மென்ட் உடன் அனைத்து பணி நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை	24-01-2025 மதியம் 12 மணி முதல் மாலை 2.00 மணி வரை

மனை எண் 96-ன் எல்லைகள்	கிழக்கு	மனை எண் 95-ன் மேற்கு பகுதி
	மேற்கு	மனை எண் 97
	வடக்கு	25 அடி அகல சாலை
	தெற்கு	மனை எண் 80 மற்றும் 81

மனை எண் 95-ன் எல்லைகள்	கிழக்கு	மனை எண் 95-ன் கிழக்கு பகுதி
	மேற்கு	மனை எண் 96
	வடக்கு	25 அடி அகல சாலை
	தெற்கு	மனை எண் 80 மற்றும் 81

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.auctiontiger.net/EPROC/ இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **''எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்'' மற்றும் ''எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்''** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை 23.01.2025 அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக LTFல் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்ஐ உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பி. ஓ மூலம் 24.01.2025 தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது 25.01.2025 அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டுக்கு, அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்து ஆய்வு செய்வதற்காக அல்லது அதிக தகவலுக்கு, வாய்ப்புள்ள ஏலதாரர்கள், அங்கீகாரம்பெற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம், அதாவது **பெயர் - சதீஷா ஆர், தொர்பு எண் 9738141146 மற்றும் சந்தோஷ் திவாரி, தொடர்பு எண் 9920490126, எல்-டி ஃபைனான்ஸ் லிமிடெட், அலுவலகம் : 6வது தளம், பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மர்சிடெஸ் ஷோரூம் அருகில், சாந்தாக்ரூஸ் (கிழக்கு) , மும்பை - 400098.** இ- ஏலத்தின் எந்த நிலையிலும், அங்கீகாரம்பெற்ற அதிகாரி எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் மற்றும் எந்த முன் அறிவிப்பும் இன்றி, ஏலத்தை ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/ திருத்தலாம்/ ஏலத்தை/சலுகையை ரத்து செய்யலாம் அல்லது தள்ளிப் போடலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விறபனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மென்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேசி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல். குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 21.12.2024
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்

Tamil Ad for Chennai - Size: 16cms (w) by 23cms (h)